


தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU 19.12.2023

26AC 468830

தமிழாய்வுத்துறை காவேரி மகளிர் கல்லூரி திருச்சி - 18

M. சாந்தி, B.Lit.,
முத்திரை தாள் விற்பனையாளர்
உரிமம் எண்: 39/2021/TRY
ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006.
:63821 76672

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**நாள் : 22.12.2023**

**காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி**

**மற்றும்**

**திருச்சித் திருக்குறள் பேரவை, திருச்சிராப்பள்ளி**

---

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி மற்றும் திருச்சித் திருக்குறள் பேரவை இடையேயான இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கல்லூரி வளர்ச்சிக்கும் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்கும் தமிழ்மொழியின் வளர்ச்சியை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் உயரிய நோக்கத்தோடும் உருவாக்கப்பட்டுச்

செயல்படுத்தப்படுகின்றது. இவ்வொப்பந்தம் இரு சாராருக்கும் பயனளிக்கும் / பங்களிக்கும் ஒப்பந்தமாகும்.

**திருச்சிராப்பள்ளி காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

1984இல் பல்வேறு துறை சார்ந்த 48 ஆன்றோர் பெருமக்களால் சமூகத்திற்கு நற்பணிகள் புரிய உயரிய நோக்கத்தோடு தொடங்கப்பட்ட ரெட்டி கல்வி அறக்கட்டளை அமைப்பினர் திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் மகளிர்க்காக மேலும் ஒரு கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தனர். அரசின் அனுமதி பெற்றுத் தமிழ்நாட்டில் முதல் கலை மற்றும் அறிவியல் சுயநிதிக் கல்லூரிகளில் ஒன்றாகக் காவேரி மகளிர் கல்லூரியை 1984இல் தொடங்கினர். ஐந்து பாடப்பிரிவுகளுக்கு அனுமதி பெற்றுத் தொடங்கப்பட்ட கல்லூரி தற்போது 16 இளங்கலைப் பாடப்பிரிவுகளுடன் 10 முதுகலைப் பாடப்பிரிவுகளுடன் 8 ஆய்வுப் படிப்புகளுடன் சகல வசதிகளுடன் இயங்கிவருகிறது. தகுதி வாய்ந்த 191 பேராசிரியர்கள் பணியாற்றிவருகின்றனர். 40 மாணவியருடன் தொடங்கப்பட்ட கல்லூரியில் இன்று 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். அன்று தொடங்கி இன்று வரை மாணவியரின் கல்வி, ஒழுக்கம் இரண்டிற்கும் முன்னுரிமை தனது தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றாக வெற்றி நடை போட்டு வருகிறது.

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் 12B அந்தஸ்தைப் பெற்றுள்ள காவேரி மகளிர் கல்லூரி பல்கலைக்கழகத் தர நிர்ணயக்குழுவினரால் மூன்று சுற்றுகளிலும் A தகுதி வழங்கப்பட்ட சிறப்பினைப் பெற்றுள்ளது. சுயநிதிக் கல்லூரி என்ற நிலையிலிருந்து ஓயாத தன் உழைப்பினால் 2019ஆம் ஆண்டு தன்னாட்சித் தகுதியையும் பெற்றது. 2020ஆம் ஆண்டு ISO 9001:2015 தரச் சான்றிதழ் பெற்றுள்ளது.

**தமிழாய்வுத்துறை**

கல்லூரியின் தனித்துவமிக்க துறையாகத் தமிழாய்வுத்துறை செயல்பட்டுவருகிறது. 1985ஆம் ஆண்டு முதல் தமிழ்த்துறை செயல்பட்டுவருகிறது. 2003ஆம் ஆண்டு இளங்கலைத் தமிழிலக்கியம், 2011ஆம் ஆண்டு முதுகலைத் தமிழிலக்கியம், முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழாய்வுத்துறையில் ஆய்வு மேற்கொண்டு 12 ஆய்வாளர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். ஒரு ஆய்வாளர் தனது ஆய்வினைச் சமர்ப்பித்துள்ளார். நான்கு ஆய்வாளர்கள் தற்போது ஆய்வினை மேற்கொண்டுவருகின்றனர்.

தற்போது 20 பேராசிரியர்களைக் கொண்டு செயல்படும் தமிழாய்வுத்துறையில் 19 பேராசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்றவர்கள். பேராசிரியர்கள் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பயிலரங்கங்கள், கருத்தரங்கங்கள் போன்றவற்றில் கலந்துகொண்டு தங்கள் திறனை வளர்த்தும் வெளிப்படுத்தியும் வருகின்றனர். UGC அங்கீகாரம் பெற்ற இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுவருகின்றனர். தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் ச.இராமலட்சுமி திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகச் செயல்பட்டுவருகிறார்.

தமிழாய்வுத்துறை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து 1 பயிலரங்கமும் 3 கருத்தரங்கங்களும் நடத்தியுள்ளது. சாகித்ய அகாதமியுடன் இணைந்து இரு நிகழ்வுகளை நடத்தியுள்ளது. மேலும் பல்வேறு விழாக்களையும் சான்றோர்களை அழைத்துச் சிறப்புச் சொற்பொழிவுகளையும் நடத்திவருகிறது. சிறந்த நூல்கள் அடங்கிய நூலகத்தையும் கொண்டுள்ளது.

**திருச்சித் திருக்குறள் பேரவை**

உலகப் பொதுமறையாம் திருக்குறளின் கருத்துக்களை மக்களிடையே பரவலாக்கும் பொருட்டு 'திருச்சித் திருக்குறள் பேரவை' என்னும் அமைப்பை உருவாக்கத் திருச்சிவாழ் தமிழ்ச் சான்றோர் சிலரால் திட்டமிடப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் 30.09.1992 அன்று அமைப்புக் கூட்டம் நடத்தப்பெற்றது. இக்கூட்டத்தில் அமைப்பு தொடக்கத்திற்கு காரணமான தமிழ்ச் சான்றோர் பெருமக்களுள்

ஒருவரான அருட்தந்தை எஸ்.எம்.ஜார்ஜ் அடிகளார் தலைமையேற்க திருக்குறள் நா.சண்முகனார், வழக்கறிஞர் திருக்குறள் அப்துல் கரீம், திருக்குறள் சு.முருகானந்தம், திருக்குறள் செம்மல் அ.ராதா, திருக்குறள் பு.சு.வேணுகோபால், பேராசிரியர் முனைவர் சாமிமுத்து ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பு செய்ய கூட்டம் இனிதே நிறைவுற்றது. பேரவையின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் சிந்தித்துத் தீர்மானம் நிறைவேற்றினர். தீர்மானத்தின் அடிப்படையில் திருச்சித் திருக்குறள் பேரவை, அரசில் பதிவு செய்யப்பட்டு, பதிவு எண் 238/1992 என்ற எண்ணுடன் இன்றுவரை திறம்படச் செயலாற்றிக்கொண்டிருக்கிறது.

திருக்குறளைப் பரப்பும் பணியைப் பள்ளி மாணவர்களிடமிருந்து தொடங்கினால்தான் சமூகத்தைச் சென்று சேரும் என்ற நன்னோக்குடன் பேரவை செயற்படத் தொடங்கியது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் குறள் ஒப்புவித்தல் போட்டி, திருக்குறள் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி எனப் பல வகைகளில் போட்டிகள் நிகழ்த்திப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் திருக்குறளை இயல் இசை நாடகம் என முப்பரிமாணத்திலும் வெளிப்படுத்தும் பொருட்டு 2015 செப்டம்பர் ஐந்தாம் நாள் குறளை மையப்படுத்திய நடனப் போட்டி நிகழ்த்தப்பெற்று முதற் பரிசாக ரூ.10,000 இரண்டாம் பரிசாக ரூ.7,500 மூன்றாம் பரிசாக ரூ.6,000 வழங்கப்பட்டது. தமிழக அரசின் மேனாள் வணிகவரித்துறை அமைச்சர் சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசளித்துச் சிறப்பித்ததுடன் பங்கேற்ற 12 நடனப் பள்ளிகளுக்கும் ரூ.1,000 வழங்கி ஊக்கப்படுத்தினார்.

திருக்குறள் பேரவையின் மாதாந்திரக் கூட்டத்தில் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பங்கேற்று உரையாற்றுகின்றனர். 133 அதிகாரங்களை மாதத்திற்கு ஓர் அதிகாரமாக அறிஞர் பெருமக்கள் உரை நிகழ்த்தியுள்ளனர். 'ஒரு குறள் ஆய்வு' என்னும் பொருளில் பொழிவிற்கு ஒரு குறள் பற்றிப் பேசிக் குறளில் ஆழ்ந்திருக்கும் அகண்டிருக்கும் பொருளினைப் புலப்படுத்துகின்றனர். குறளின் முரண்கள் குறித்தும் உரை நிகழ்த்தப்பட்டுள்ளது. பேரவையின் ஆண்டு விழாக்களில் தமிழ் அறிஞர் பெருமக்களும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெருமக்களும் பங்கேற்று விழாப் பேருரை நிகழ்த்தியுள்ளனர்.

திருக்குறள் பேரவைக்குப் பொன்மகுடம் சூட்டுவது போல் பல நிகழ்ச்சிகள் அரங்கேறியுள்ளன. அவ்வகையில் முதல் உலகத் திருக்குறள் மாநாட்டினைக் கி.பி.2000 ஆம் ஆண்டில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் திருச்சித் திருக்குறள் பேரவை நடத்தியது. இம்மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் கன்னியாகுமரியில் ஐயன் வள்ளுவனுக்கு 133 அடி திருவுருவச்சிலை திறந்து வைத்த கையோடு தமிழக அமைச்சர் பெருமக்களும் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் பங்கேற்றுப் பெருமைப்படுத்தினர். முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாநாட்டுப் பேருரையாற்றினார். மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாட்டில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரைகள் மூன்று பெருந்தொகுதிகளாக வெளியிடப்பட்டன. மாநாட்டில் பல நாட்டு அறிஞர்கள் துணைவேந்தர்கள் பேராசிரியர்கள் பங்கேற்றுக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தினர்.

திருச்சித் திருக்குறள் பேரவையின் சார்பாக பல அரும்பணிகள் நடந்துள்ளன. எஸ்.என். திருமண மண்டப வாசலில் அதன் உரிமையாளர் திரு.எஸ்.நடராசன் அவர்கள் தன் சொந்த செலவில் திருவள்ளுவர் சிலை நிறுவ உறுதுணையாய்ப் பேரவை திகழ்ந்தது. ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைக்கு 15.12.2017இல் திருச்சித் திருக்குறள் பேரவை ரூ. 1 இலட்சம் வழங்கித் தன் தமிழ்ப்பற்றை உறுதி செய்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மற்றும் பொன்னம்பல அடிகளார் பேரவையின் நிகழ்வுகளில் பங்கேற்றுப் பேரவையைப் பெருமைப்படுத்தியதுடன் தொடர் ஆசி வழங்கிவருகின்றனர்.

திருக்குறள் நா.சண்முகனார், அருட்தந்தை ஜார்ஜ் அடிகளார், பாரிவள்ளல் அண்ணாமலைச் செட்டியார், பங்காரு. திருக்குறள் வேணுகோபால், பேராசிரியர் சாமிமுத்து போன்றோர் இம்மையில் வழிகாட்டியது போல் மறுமையிலும் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றனர். பேரவையின்

முன்னாள் தலைவர் நா.சீனிவாசன், முன்னாள் செயலாளர் புலவர் வ.கேசவன் ஆகியோர் இன்றும் பேரவையின் செயற்பாடுகளில் பெரும் பங்காற்றிவருகின்றனர்.

பேரவையின் தற்போதைய தலைவராக நல்லாசிரியர் விருது பெற்ற பு.வெ.தேவராசு அவர்களும் செயலாளராக ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஜாகீர் ஹசன் அவர்களும் பொருளாளராக வி.இராசேந்திரகுமார் அவர்களும் பொறுப்பேற்றுச் சீரிய பணியாற்றி வருகின்றனர். மேலும் திருக்குறள் பணிச் சிறக்க ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கக்கூடிய திருச்சித் திருக்குறள் பேரவையின் துணைத்தலைவர்கள், இணைச்செயலாளர்கள், துணைச்செயலாளர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிறப்பாகப் பணியாற்றிவருகின்றனர்.

பேரவையின் உறுப்பினர்களாகப் பல கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் பள்ளி ஆசிரியர்களும் தமிழ் ஆர்வலர்களும் பல்துறை வல்லுநர்களும் சீரிய முறையில் செயலாற்றிவருகின்றனர்.

**ஒருங்கிணைப்பு**

புரிந்துணர்வு உடன்படிக்கை சார்ந்த அனைத்துச் செயற்பாடுகளுக்கும் கல்லூரியின் சார்பில் தொடர்பு அதிகாரியாக (Liaison Officer) கல்லூரி முதல்வர் அவர்கள் செயல்படுவார்கள்.

கல்லூரியின் தமிழாய்வுத்துறை தலைவர் திட்ட இயக்குநராகவும் தமிழாய்வுத்துறையின் பேராசிரியர்கள் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாகவும் செயல்படுவார்கள். இந்தப் புரிந்துணர்வுத் திட்டத்தின் செயல்பாடுகளைத் தமிழாய்வுத்துறை ஒருங்கிணைக்கும்.

**இருதரப்பினரின் செயல்பாடுகள் காலவரையறை**

தமிழ்மொழியின் வளர்ச்சியை கருத்திற் கொண்டு எதிர்காலச் சந்ததியினருக்குத் தமிழ்மொழியின் சிறப்புகளை எடுத்துச் சொல்லும் உன்னத நோக்கோடு நடத்தப்படும் விழாக்கள், போட்டிகள், கருத்தரங்குகள் ஆகியவை இரு சாராராலும் இணைந்து செயல்படுத்தப்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத் தேதியின்படி செயல்பாடுகள் இரு நிறுவனங்களுக்கும் பொதுவானதாகும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எந்த உறுப்பினராலும் மாற்றம் செய்யப்படலாம். எந்த ஒரு அடிப்படை வேறுபாட்டையும் காட்டாது இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உடனடியாக நடைமுறைக்கு வரும். கையெழுத்திட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு இது தொடர்ந்து செயல்படும். அதன்பின் இருதரப்பினரின் ஒப்புதலுடன் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

மற்றும்

திருச்சித் திருக்குறள் பேரவை, திருச்சிராப்பள்ளி

தேதி : 22.12.2023

V. Sujatha
22.12.23

முனைவர் வெ.சுஜாதா

முதல்வர்,

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி.

Principal
Cauvery College For Women
(Autonomous)
Annamalai Nagar,
Tiruchirappalli - 620 018.
Tamilnadu.

CAUVERY COLLEGE FOR WOMEN (AUTONOMOUS) TRICHY-18.

22.12.23

திரு.பு.வெ.தேவராசு – தலைவர்

திருச்சித் திருக்குறள் பேரவை,

127/7, சரோதன் அடுக்குமாடிக் குடியிருப்பு,

கண்டோன்மெண்ட், திருச்சி – 620001

பதிவு எண். 239/92

தலைவர்
திருச்சித் திருக்குறள் பேரவை

22/12/23

முனைவர் ச. இராமலட்சுமி

தலைவர், தமிழாய்வுத்துறை,

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி.

பேரா.முனைவர் ச.இராமலட்சுமி
தலைவர், தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி - 620 018

சாட்சிகள்

22/12/23

1. கையொப்பம்

முனைவர் ப. [illegible]
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி - 18

பெயர் மற்றும் முகவரி

V.Rajendrakumar

1. கையொப்பம்
பொருளாளர்

முனைவர். [illegible]

பெயர் மற்றும் முகவரி

துணைத்தலைவர்
திருச்சித் திருக்குறள் பேரவை
அலைபேசி எண் : 9443124831.

22/12/23

2. கையொப்பம்

முனைவர் மு. [illegible]
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி - 18

பெயர் மற்றும் முகவரி

2. கையொப்பம்

(பேரா. முனைவர். கு. சம்பத்)
ஆட்சிக்குழு உறுப்பினர்
திருச்சி திருக்குறள் பேரவை

பெயர் மற்றும் முகவரி

பேரா. முனைவர். கு. சம்பத்
பழைய I. எச். 255 நவல்பட்டு
அண்ணாநகர்
திருச்சி - 26
8610483044